## நடப்பு நிகழ்வுகள்: மார்ச் 18, 2017

**1. எந்த நகரம், `மாநில சட்ட சேவைகள் அதிகாரிகளின் அகில இந்திய சந்திப்பின் (All India Meet of State Legal Services Authorities)' 15-வது பதிப்பை நடத்துகிறது ?**

A. புது தில்லி
B. சூரத்
C. ஜெய்ப்பூர்
லக்னோ

**விடை: A. புது தில்லி**

நாடு முழுவதும் சட்ட சேவைகள் அதிகாரிகளின்(legal services authorities) வேலையை மீளாய்வு செய்ய, மாநில சட்ட சேவைகள் அதிகாரிகளின் அகில இந்திய சந்திப்பின் (All India Meet of State Legal Services Authorities)' 15-வது பதிப்பு மார்ச் 18, 2017 அன்று புது தில்லியில் உள்ள பிரவசி பாரதிய கேந்திராவில் தொடங்கியது. இந்த 2 நாள் நிகழ்வை, தில்லி மாநில சட்ட சேவைகளுடன் இணைந்து தேசிய சட்ட சேவைகள் ஆணையம் (NALSA) ஏற்பாடு செய்துள்ளது.

**2. எந்த கல்வி நிறுவனம், டைம்ஸ் உயர் கல்விக்கான(Times Higher Education's Asia University ranking) ஆசியா பல்கலைக்கழகம் 2017 தரவரிசையில் முதலாவதாக இருக்கிறது ?**

A, பேகிங் யுனிவர்சிட்டி, சீனா
B. இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆ.்.ப் சயின்ஸ் (IISc), பெங்களூர்
C. சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம் (NUS)
D. இந்திய தொழில்நுட்பக் கழகம் (IIT) கான்பூர்

**விடை: C. சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம் (NUS)**

டைம்ஸ் உயர் கல்விக்கான(Times Higher Education's Asia University ranking) ஆசியா பல்கலைக்கழகம் 2017 தரவரிசையில் முதல் 300 கல்வி நிறுவனங்களில் முதலாவதாக சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம் (NUS) உள்ளது.

இந்தியாவிலிருந்து இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் சயின்ஸ் (IISc), பெங்களூர் 27வது இடத்தையும், ஐஐடி பாம்பே 42-வது இடத்தையும் பெற்றுள்ளது. தரவரிசையில் அதிக கல்விநிறுவனங்களை கொண்டுள்ள நாடாக ஜப்பான் திகழ்கிறது, அதாவது ஜப்பானின் 69 கல்விநிறுவனங்கள் இதில் உள்ளன, அதனை தொடர்ந்து 54 கல்வி நிறுவனங்களுடன் சீனா உள்ளது. முதல் முறையாக, தரவரிசையில் 33 கல்வி நிறுவனங்களுடன் 3-வது பிரதிநிதித்துவம் பெற்ற நாடாக இந்தியா விளங்குகிறது.

**3. எந்த இந்திய-அமெரிக்க ஆளுமை, 2017 ரிஜெனிரான் சயின்ஸ் டேலன்ட் தேடல் (Regeneron Science Talent Search) விருதை வென்றுள்ளார் ?**

A. அர்ச்சனா வர்மா
B. அர்ஜுன் சீனிவாசன் ரமணி
C. பிரதிக் நாயுடு
D. இந்திராணி தாஸ்

**விடை: D. இந்திராணி தாஸ்**

இந்திய-அமெரிக்க உயர்நிலை பள்ளி மாணவி இந்திராணி தாஸ், மூளை காயங்கள் மற்றும் நோய்களுக்கு சிகிச்சை அளித்தல் குறித்த தனது ஆராய்ச்சிக்காக, $250,000 பரிசுத்தொகை கொண்ட மதிப்புக்குரிய 2017 ரிஜெனீரோன் சயின்ஸ் டேலன்ட் தேடல் (Regeneron Science Talent Search) விருதை வென்றுள்ளார். இது மாணவர்களுக்கான பழமையான அமெரிக்க அறிவியல் போட்டியாகும். தற்போது Society for Science and the Public (SSP) உடன் இணைந்து "Regeneron" எனும் மருத்துவ நிறுவனம் இதற்கு ஸ்பான்சர் செய்கிறது.

**4. முதலாவது ஹரியானா சாஹித்ய சங்கம்(Haryana Sahitya Sangam), எந்த நகரத்தில் தொடங்கியது ?**

A. பரிதாபாத்
B. பஞ்ச்குலா
C. குர்கான்
D. கர்னல்

**விடை: B. பஞ்ச்குலா**

முதலாவது ஹரியானா சாஹித்ய சங்கம், பஞ்ச்குலாவில் உள்ள இந்திராதனுஷ் அரங்கத்தில் தொடங்கியது, இதில் நாடு முழுவதும் இருந்து 2,000 க்கும் மேற்பட்ட அறிஞர்கள், எழுத்தாளர்கள் மற்றும் சிந்தனையாளர்கள் கலந்துகொள்கின்றனர். திருவிழாவின் நோக்கம், இலக்கியம் மற்றும் கலாச்சார துறையில் மாநில பங்களிப்பை உயர்த்திக் காட்டுதல் மற்றும் இளம் மற்றும் மலரும் எழுத்தாளர்கள் பரந்த மற்றும் உண்மையான வழிகாட்டல் பெற ஒரு மேடையை வழங்குவதாகும்.

**5. உலக வங்கியானது, இந்தியாவின் தேசிய ஹைட்ராலஜி திட்டத்திற்கு எவ்வளவு கடன்தொகைக்கு ஒப்புதல் அளித்துள்ளது ?**

A. $175 மில்லியன்
B. $210 மில்லியன்
C. $222 மில்லியன்
D. $325 மில்லியன்

**விடை: A. $175 மில்லியன்**

வெள்ளத்தை முன்கூட்டியே கணிப்பதில் இந்தியாவின் திறனை அதிகரித்து திரும்ப திரும்ப நிகழும் வெள்ளம் மற்றும் வறட்சியின் பாதிப்பை குறைக்க தேசிய ஹைட்ராலஜி திட்டத்திற்கு உலக வங்கியானது $175 மில்லியன் கடன் ஒப்புதல் அளித்துள்ளது. புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியிடம் (IBRD) இருந்து பெறப்படும் இந்த கடன் தொகைக்கு சலுகையாக 6 ஆண்டுகாலத்திற்கு எந்த வட்டி பணம் தேவையில்லை. கடன் 23 ஆண்டுகளில் முதிர்ச்சி அடையும். முழு நாட்டின் நிகழ்நேர தரை(real-time ground information) பற்றிய தகவல் இல்லாததால் சரியான நேரத்தில் எச்சரிக்கைகளை வழங்குவதில் சிரமங்கள் உருவாகிறது, எனவே இந்த நடவடிக்கையானது, அடிக்கடி வெள்ளம் மற்றும் வறட்சி ஏற்படும் பகுதிகளில் பாதிப்பை குறைக்க உதவும்.

**6. பிற நாடுகளில் பணியமர்த்தப்பட்ட (Detached workers) தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்க, சமீபத்தில் இந்தியா எந்த நாட்டுடன் சமூகப் பாதுகாப்பு ஒப்பந்தத்தில்(SSA) கையெழுத்திட்டது ?**

A. இந்தோனேஷியா
B. பிரேசில்
C. சீனா
D. தென் ஆப்ரிக்கா

**விடை: B. பிரேசில்**

இந்திய அரசு, பிற நாடுகளில் பணியமர்த்தப்பட்ட (Detached workers) தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்க பிரேசிலுடன் சமூகப் பாதுகாப்பு ஒப்பந்தம் (SSA) ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது. ஒப்பந்தம் படி, இரு நாடுகளிலும் உள்ள பணியமர்த்தப்பட்ட தொழிலாளர்கள் அந்தந்த நாடுகளில் பங்களிப்பு செய்திருந்தால் அவர்கள் சமூக பாதுகாப்பு பங்களிப்புக்கள் செய்வதில் இருந்து விலக்கு அளிக்கப்படுவர். இரு நாடுகளுக்கும் இடையே முதலீட்டு ஓட்டங்களை மேலும் ஊக்குவிக்க SSA உதவும். இந்தியா, இதுநாள் வரை 18 நாடுகளுடன் சமூக பாதுகாப்பு ஒப்பந்தங்களை(SSA) கையெழுத்திட்டு நடைமுறைப்படுத்தியுள்ளது. அந்த 18 நாடுகள் பின்வருமாறு: ஆஸ்திரேலியா, ஆஸ்திரியா, பெல்ஜியம், கனடா, செக் குடியரசு, டென்மார்க், பின்லாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, ஹங்கேரி, ஜப்பான், லக்ஸம்பர்க், நெதர்லாந்து, நார்வே, போர்ச்சுகல், ஸ்வீடன், சுவிச்சர்லாந்து, மற்றும் தென் கொரியா.

**7. உலக வங்கி, மேற்கு வங்கத்தில் உள்ள கிராமப் பஞ்சாயத்துகளின் (GPs) வளர்ச்சிக்காக, எவ்வளவு கடன் தொகையை ஒப்புதல்(sanctioned) செய்துள்ளது ?**

A. $ 222 மில்லியன்
B. $ 210 மில்லியன்
C. $ 321 மில்லியன்
D. $ 400 மில்லியன்

**விடை: B. $ 210 மில்லியன்**

கிராமப்புற உள்ளூர் அரசாங்கத்தின் கீழ் அடுக்கான கிராமப் பஞ்சாயத்துகளை (GPs) வலுப்படுத்த மேற்கு வங்க மாநிலத்திற்கு $ 210 மில்லியன் கடன் தொகை வழங்க உலக வங்கி சமீபத்தில் ஒப்புதல் அளித்தது. இந்த கடன்தொகையானது, மாநிலத்தின் பெரும்பாலான ஏழைகள் தங்கியிருக்கும்

கிராமப்புறங்களில் மேற்கொள்ளப்படும் திட்டங்களின் திட்டமிடல், வரவு செலவு திட்டமிடல், நிதி மேலாண்மை ஆகியவற்றில் உள்ளூர் சமூகங்களின் பங்கேற்பை வலுப்படுத்த பயன்படுத்தப்படும். கடனின் சலுகை காலம் 8 ஆண்டுகள் மற்றும் முதிர்ச்சி காலம் 15 ஆண்டுகளாக உள்ளது.

**8. "Indica: A Deep Natural History of the Indian Subcontinent" என்ற புத்தகத்தின் ஆசிரியர் யார் ?**

A. ஹரி வி கிருஷ்ணா
B. ஜான் மில்லர்
C. பிரனே லால்
D. வால்மீகி தாபர்

**விடை: C. பிரனே லால்**

"Indica: A Deep Natural History of the Indian Subcontinent" என்ற புத்தகத்தை பிரனே லால் எழுதியுள்ளார். இது, இந்தியத் துணைக்கண்டம், அதன் தோற்றம் மற்றும் அதைச் சுற்றிலும் உள்ள நிலப்பகுதிகள் எப்படி உருவானது என்பது பற்றிய புத்தகம். 20 ஆண்டுகளில் இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் ஆசிரியரின் தீவிரமான மற்றும் நுண்ணிய ஆராய்ச்சி தடயங்களை புத்தகம் வழங்குகிறது.

**9. SRCC குளோபல் மில்லினியம் உச்சி மாநாடு 2017, எந்த நகரத்தில் தொடங்கியது ?**

A. துபாய்
B. லண்டன்
C. புது தில்லி
D. ஜெனீவா

**விடை: A. துபாய்**

SRCC குளோபல் மில்லினியம் உச்சி மாநாடு 2017, ஐக்கிய அரபு எமிரேட்ஸ்சில் (UAE) உள்ள துபாயில் மார்ச் 18 அன்று தொடங்கியது, இது மார்ச் 19. வரை நடைபெறும். இந்த முதல்-வகையான முன்னெடுப்பை ஐஐஎம்

அகமதாபாத் மற்றும் ஐஐடி கரக்பூர் மாணவர்களுடன் இணைந்து ஸ்ரீ ராம் வர்த்தக கல்லூரி(SRCC) மற்றும் தில்லி பல்கலைக்கழக மாணவர்கள் ஏற்பாடு செய்துள்ளனர். உச்சிமாநாட்டின் நோக்கம், உலகம் முழுவதும் உள்ள இளைஞர்களுக்கு விவாதிக்க, செயல்பட மற்றும் தொடர்பு கொள்ள ஒரு மேடையை வழங்குவதாகும். உலகின் முன்னணி பல்கலைக்கழகங்களின் மாணவர்கள் மற்றும் ஆட்சி, வணிகம், தொழில்நுட்பம் மற்றும் கல்வி ஆகிய துறைகளில் குறிப்பிடத்தக்க தலைவர்களையும் இந்த உச்சி மாநாடு ஒன்றாக கொண்டுவரும். உச்சி மாநாட்டின் மையக்கரு 'Future of this Millennium' என்பதாகும். இது மையக்கருவை மையமாகக்கொண்டு குழு விவாதங்கள், பயிற்சிப் பட்டறைகள், போட்டிகள் மற்றும் சிறப்புப் பேச்சாளர் ஆகிய அமர்வுகளை கொண்டுள்ளது. இந்தியாவில் இருந்து விஜய் கோயல் (இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுதுறை இணையமைச்சர்) இம்மாநாட்டில் சிறப்பு விருந்தினராக கலந்துகொள்கிறார்.

**10. உத்தரகண்ட் மாநிலத்தின் புதிய முதல்வர் யார் ?**

A. ரமேஷ் போக்ரியா நிஷாங்க்
B. பி சி கான்டூரி
C. சித்ரஞ்சன் தாஸ்
D. திரிவேந்திர சிங் ராவத்

**விடை: D. திரிவேந்திர சிங் ராவத்**

மூத்த பாஜக தலைவர் திரிவேந்திர சிங் ராவத், உத்தரகண்ட் மாநிலத்தின் 8-வது முதல்வராக பதவியேற்றார். சமீபத்தில் நடைபெற்ற 2017 உத்தரகண்ட் மாநில சட்டமன்ற தேர்தலில் பா.ஜ.க கட்சி 70 இடங்களில் 57 இடங்களில் வெற்றி பெற்றது. மாநிலத்தில் இதுவரை எந்தவொரு கட்சியும் பெறாத மிகப்பெரிய வெற்றி இதுவாகும்.